மாண்புமிகு திரு. ம. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலையிலிருந்து வெளியேற்றப்படுகின்ற கழிவு நீர் சுத்தம் செய்யப்பட்டு ஆலையினுடைய பொறுப்பிலே இருக்கிற விவசாயப் பண்ணைக்கும் ஆலையை ஒட்டி இருக்கிற விவசாய நிலங்களுக்கும் மட்டும் விவசாயத்திற்காக பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 173, திரு. என்.ஆர். ராஜேந்திரன், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

173—

சாலியந்தோப்பு காலனியில் சத்துணவுக் கூடம் கட்டுதல்

***21124**—திரு. என்.ஆர். ராஜேந்திரன்:*

மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) காட்டுமன்னார்கோயில் தொகுதி, சாலியந்தோப்பு கிராம காலனிக்குச் சொந்தமான பொது இடத்தில் சத்துணவுக் கூடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும்?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் *(ஆ)* : ஆம். 1995-96-ல் ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்பட்டு கட்டிட வேலை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10.30

திரு. என். ஆர். ராஜேந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குமராட்சி ஒன்றியம், சாலியந்தோப்பு கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று போர்க்கால அடிப்படையில் அதற்கான உத்தரவு பிறப்பிக்கப்பட்டு தற்போது பணி சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஆகவே தமிழகத்தின் காவல் தெய்வம் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும் மாண்புமிகு சமூகநலம் மற்றும்

கைத்தறித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த உத்தரவைப் பிறப்பித்து உடனடியாக பணி செய்ய ஆணையிட்டதற்காக எங்கள் தொகுதியின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 174, திரு. எஸ். ஆசைமணி, மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

174—

விவேகானந்தா உதவி துவக்கப்பள்ளிக்கு சத்துணவுக் கட்டிடம் கட்டுதல்

***25088**—திரு. எஸ். ஆசைமணி:*

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டம், குத்தாலம் தொகுதி, குடவாசல் ஒன்றியம், மானந்தக்குடி அய்யன் பேட்டை ஊராட்சி, விவேகானந்தா உதவி துவக்கப்பள்ளிக்கு நிரந்தர சத்துணவுக் கட்டிடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தனியார் பள்ளிக்கூடத்தில் சத்துணவுக் கூடம் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்ய இயலாது. தனியார் யாராவது முன் வந்தால் அதைப் பற்றி ஆய்வு செய்யும்.

திரு. எஸ். ஆசைமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடவாசல் ஒன்றியம்-மானந்தக்குடி அய்யன்பேட்டை ஊராட்சியில் இருக்கின்ற உதவி துவக்கப்பள்ளி தனியார் பள்ளியாக இருந்தாலும்கூட முன்பு இதே ஊரில் அரசு உயர்நிலைப் பள்ளி அமைக்கப்பட்ட நேரத்தில், நடுநிலைப்பள்ளி நடத்திவந்த இந்தப் பள்ளியினுடைய நிர்வாகி அந்தப் பள்ளிக்குச் சொந்தமான கட்டிடம், இடம் போன்றவைகளை எல்லாம் உயர்நிலைப் பள்ளிக்கு விட்டுக் கொடுத்து நல்ல காரியங்களைச் செய்து இருக்கிறார். எனவே அவர்களுடைய வேண்டுகோளை ஏற்று பொன்விழா நடத்திக்கொண்டிருக்கின்ற அந்த உதவி பெறும் துவக்கப்பள்ளிக்கு சிறப்புத் திட்டத்தின் கீழ் ஒரு சத்துணவு கூடத்தைக் கட்டித் தருவதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.